**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவிடைமருதூர்**

முன்னிலை: **திரு.நா.சிவபழனி,B.A., B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

2022 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 08 ம் நாள் செவ்வாய் கிழமை,

**இ. ம எண்-261/2019 ல் அ.வ.எண்.470/2019**

மாரியம்மாள் ..... மனுதாரர்/வாதி

/எதிராக/

1. அய்யாறு
2. சிவா (எ)நமச்சிவாயம்
3. சண்முகம்
4. தங்கம்
5. சீதா
6. சுமித்திரா .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது கும்பகோணம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் கடந்த 06/08/2019 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்பு நில அதிகார வரம்பின் கீழ் இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, இந்நீதிமன்றத்தால் கடந்த 14/08/2019 அன்று மறுகோப்பிற்கு எடுக்கப்பட்டு , இன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்த போது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.K.விஜய்ஆனந்த்,B.A,B.L.,,** அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.N.சுவாமிநாதன், B.com,B.L.,** அவர்கள் ஆஜராகியும், எதிருரை தாக்கல் செய்யாததால் ஒருதலைபட்சம் ஆக்கப்பட்டும், தரப்பினர்களாக சேர்க்கப்பட வேண்டிய 7 முதல் 11 எதிர்மனுதாரர்களுக்கு அறிவிப்பு சார்வு செய்யப்பட்டும், நீதிமன்றத்தில் ஆஜராகததால் தோன்றாதரப்பினராக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதம் வழக்காவணங்கள் பரிசீலித்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 1 விதி 10(2)ன் கீழ் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள 7 முதல் 11 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் மனுவில் பிரதிவாதிகளாக சேர்க்க உத்தரவிட கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்**

2. இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதியாவார். மேற்படி வழக்கானது பிரதிவாதிகளுக்கு எதிராக பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கின் வழக்குரையில் காலம் சென்ற மனுதாரரின் தகப்பனார் மகாலிங்கம் என்பவரின் வாரிசான காமாட்சி என்பவருக்கும் பாகம் உண்டு என்று கூறியுள்ளதாகவும், அவர் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னரே இறந்துவிட்டதால் அவரது வாரிசுகளை அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க வேண்டியது அவசியம் என்பதாலும், எனவே மேற்படி நபர்களை அசல் வழக்கில் பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டும் என்றும், எனவே மேற்கண்ட பரிகாரம் கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

3. 1 முதல் 6 எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாததால் ஒருதலைபட்சம் ஆக்கப்பட்டுள்ளனர். 7 முதல் 11 எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினராக்கப்பட்டுள்ளனர்.

4. மனுதாரர் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

5. மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனத்துடன் பரிசீலிக்கப்பட்டது.

**தீர்வு**

6. வழக்காவணங்களை கண்ணுற்றதில், அசல் வழக்கானது மனுதாரரால்

பிரதிவாதிகளுக்கு எதிராக பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கின் வழக்குரையில் காமாட்சி என்பவருக்கு வழக்கு சொத்தில் பாகம் உள்ளதாக கூறப்பட்டுள்ளது. மேலும் மேற்படி அசல் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னரே மனுதாரர்/வாதியின் தந்தையின் வாரிசான காமாட்சி என்பவர் இறந்துவிட்டார் என்றும், எனவே அவரது வாரிசுகளை7 முதல் 11 எதிர்மனுதாரர்களாக அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க கோரி மனுதாரர்களால் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. மேற்படி 7 முதல் 11 எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினராக்கப்பட்டிருந்தாலும், அசல் வழக்கானது பிரதிவாதிகளுக்கு எதிராக பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதாலும், அசல் வழக்கின் வழக்குரையில் காமாட்சி என்பவருக்கு வழக்கு சொத்தில் பாகம் உள்ளதாக கூறப்பட்டுள்ளதால் மேற்படி 7 முதல் 11 எதிர்மனுதாரர்களை தரப்பினர்களாக சேர்க்க வேண்டியது அவசியம் என்பதாலும், 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபணை எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்பதாலும், இம்மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**முடிவாக, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை**.

இவ்வுத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று (08-11-2022) இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>:**

இல்லை.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**